# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,724 — 1966 දෙසැම්බර් 2 වැනි සිකුරාදා — 1966.2 12

14,724 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 345 |
| பதவிகள்—வெறறிடம் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — |
| துணை விதிகள் .. | 346 |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | 346 |
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| நானாவித அறிவித்தல்கள் .. | 347 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

*245 ம் பிரிவின் கீழான கட்டளை*

(255 ம் அத்தியாயமாம்) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 245 (1) ம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் இட்ட கட்டளை.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு, 14 நவம்பர், 1966.

(255 ம் அத்தியாயமாம்) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 245 ம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1964, பெப்ருவரி 28 ன் 13,961 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட வத்தளை-மாபோளை-பேலியகொடை நகர சபையினதும் அதன் பின்னுருத்தாளிகளான வத்தளை-மாபோளை நகர சபையினதும், பேலியகொடை நகர சபையினதும் உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் இளைப்பாற்றுச் சம்பளமும் சேவை நன்கொடையும் வழங்குதற்கான பொறுப்புகளையும் கடப்பாடுகளையும் நியாயமான முறையில் ஒழுங்குபடுத்துவது பற்றிய கட்டளை, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(அ) (2) ம் பந்தியில் "1962, பெப்ருவரி 1 ல் புதுச்சபைகளுக்கு மாற்றப்பட்ட பழைய சபையின் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும்" என்பதற்குப் பதிலாக "பழைய சபையில் இருந்த உத்தியோகத்தர்களும் ஊழியர்களும்" என்பதைச் சேர்ப்பதன் மூலமும் ;

(ஆ) (4) ம் பந்தியில் "முன்சொல்லப்பட்ட திகதி தொடக்கமாக புதிய சபைகளுக்கு மாற்றப்பட்டவர்களும்" என்பதை விட்டுவிடுதல் மூலமும்.

12-264—2.12.66ந் திகதிய வர்த்தமானி இல. 14,724

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக்கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1966 ம் ஆண்டு ஜூலை மீ 15 ந் உ.

பேர்னுட் த சில்வா,
அரசாங்க அழுத்தகன்.

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

**17 ம் பிரிவின்படியான அறிவித்தல்**

1961ன் 60 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (5) ஆம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு, உள்ளூராட்சி உதவி அதிகாரி, வட பிரதேசம் (மேல்), யாழ்ப்பாணம், சிவசுப் பிரமணியம் சின்மயானந்தகுரு மாணிக்கவாசகர் ஆகிய நான் இதன் அட்டவணை பத்தி I ல் குறிக்கப்பட்டுள்ள கிராமச் சபையின் கூட்டத்தை அந்த அட்டவணைப் பத்தி II ல் உள்ள எற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில் அந்த அட்டவணையின் பத்தி III ல் உள்ள எற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த அட்டவணையின் பத்தி IV ல் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

சி. சி. மாணிக்கவாசகர்,
உள்ளூராட்சி உதவி அதிகாரி,
வட பிரதேசம் (மேல்).

உள்ளூராட்சி அமைச்சு,
யாழ்ப்பாண அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1966 ம் ஆண்டு கார்த்திகை மீ 18 ந உ.

**அட்டவணை**

| பத்தி I கிராமச் சபையின் பெயர் | பத்தி II திகதி | பத்தி III நேரம் | IV இடம் |
|---|---|---|---|
| வட்டுக்கோட்டை .. | 9.12.66 .. | மு. ப. 10.00 .. | கிராமச் சபை அலுவலகம், வட்டுக் கோட்டை |

12-271—2.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,724

---

## துணை விதிகள்

### கொலன்னுவை நகரசபை

*நகரசபைகள் கட்டளைச் சட்டம்*

*(255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153, 157 ஆகிய பிரிவுகளின் கீழ் கொலன்னுவை நகர சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 154 ம் பிரிவினால் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப் பட்ட துணை விதிகள்.*

*நிரந்தரச் செயலாளர்,*
*உள்ளூராட்சி அமைச்சு,*

*கொழும்பு, 25.9.1966.*

**துணைவிதிகள்**

*கீழ்க்காணும் தொழில்கள் அபாயகரமானவையாகவும் அருவருப்பானவையாகவும் கருதப்பட வேண்டும் :—*

*(அ) இரும்புப் பெட்டிகள் உற்பத்தி செய்தல்*
*(ஆ) இரப்பர் பொருட்கள் உற்பத்தி செய்தல்*
*(இ) "கொங்கிறீற்" ஓடுகளும் குழாய்களும் உற்பத்தி செய்தல்*
*(ஈ) (இயந்திரத்தினால்) தேயிலைப்பெட்டிகள் உற்பத்தி செய்தல்*
*(உ) (கையினால்) தேயிலைப் பெட்டிகள் உற்பத்தி செய்தல்*
*(ஊ) மோட்டார் வாகனங்கள் திருத்தஞ் செய்யும் வாகனக் காலை வைத்து நடத்தல்*
*(எ) தித்திக்குழிகை, உரத்தித்தி, மிட்டாய்வகைகள் ஆதியன உற்பத்தி செய்தல்*
*(ஏ) தளபாடங்கள் உற்பத்தி செய்தல்*
*(ஏஏ) சப்பாத்துகள் உற்பத்தி செய்தல்*
*(ஐ) துடைப்பங்கள் உற்பத்தி செய்தல்*
*(ஒ) குத்தியந்திரம் வைத்து நடத்தல்*
*(ஓ) சீமேந்து சேகரித்து வைத்தல்*
*(ஔ) பீடிகள், சுருட்டுகள், சிகரெட்டுகள் உற்பத்தி செய்தல்*
*(க) சவர்க்காரம் உற்பத்தி செய்தல்*
*(கா) ஐஸ்கிறீம் உற்பத்தி செய்தல்*
*(கி) உலோகப் பண்டங்கள் சேகரித்து வைத்தல்*
*(கீ) வெற்றுப் போத்தல்கள் சேகரித்து வைத்தல்*
*(கு) சாக்குகள் சேகரித்து வைத்தல்*
*(கெ) வர்ணப் பசைகள் சேகரித்து வைத்தல்*
*(கே) (இயந்திரத்தால் அல்லது வேறு வகையில்) தொழிற்படும் அச்சியந்திரசாலை வைத்து நடத்தல்*
*(கொ) ஒட்டுவேலை செய்யும் தொழிற்களம் ஒன்று வைத்து நடத்தல்*
*(கோ) நிலக்கரி, மரக்கரி ஆதியன சேகரித்து வைத்தல்.*

*12-266—2.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,724*

---

## உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### *உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)*

*கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட்சகர்கள், அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிக்கப் பட்டுள்ள உள்ளூரதிகார சபைகளது வட்டாரங்களின் பிரதி நிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென, (262 ம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 36 ம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*ஈ. எப். டயஸ் அபேசிங்க,*
*தேர்தல் அதிகாரி,*
*(உள்ளூர்ச் சபைகள்)*

*கொழும்பு, நவம்பர் 22, 1966.*

*அட்டவணை*

| வட்டார இலக்கம் | அபேட்சகரின் பெயர் |
|---|---|
| | **கண்டி மாவட்டம்** |
| | *யட்டிநுவர கங்க பலாத்த கிராமச் சபை* |
| 7 ... | அதாவுட முதியன்செலாகே சந்திரசேகர |
| | **நுவரா எலியா மாவட்டம்** |
| | **மெதபலாத்த கிராமச் சபை** |
| 6 ... | ஜயசேகர கருணாநாயக்க முதியன்செலாகே கிரிபண்டே |

*12-240—2.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,724*

மன்னார் மாவட்டம்

மாந்தை வடக்கு கிராமச் சபை

(262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 26 (2) (அ), 35 (1) ஆகிய பிரிவுகளுக்கிணங்க நியமிப்பு நாட்களில், மாந்தை வடக்கு கிராமச் சபையின் 7 ஆம் இலக்க வட்டாரத்தின் பொருட்டான தேர்தலுக்கு வேட்பாளர் எவரும் முறைப்படி நியமிக்கப்படவில்லையென, கட்டளைச் சட்டத்தின் 35 (2) ஆம் பிரிவின்கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

ஈ. எப். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு, நவம்பர் 22, 1966.

12-224—2.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14724

---

## நானாவித அறிவித்தல்கள்

### 1952 ம் ஆண்டின் 6 ம் இலக்க உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (நியமத்துணை விதிகள்) அதிகாரச் சட்டம்

உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் நியமத்துணை விதிகள் அதிகாரச்சட்டம் அத்தியாயம் 261 (3) ம் பிரிவின்கீழ் திருமலை மாவட்டத்து தெகிவத்தைக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் அப் பிரிவின் தாற்பரியப்படி பிரசுரிக்கப்படுகின்றது.

தீர்மானம்

உள்ளூராட்சி அமைச்சு அவர்களால் ஆக்கப்பட்டு "செனற்" சபையாலும், ஜனப்பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டதென 1965 ம் ஆண்டு தை மாதம் 8 ந் திகதி வெளியான 14,267 இலக்கமுடைய அரசாங்க வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட உபவிதிகள் (XXXVIII) பாகங்களில் தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வதென்று தெகிவத்தைக் கிராமச்சபை 1952 ம் ஆண்டின் 6 ம் இலக்க உள்ளூரதிகாரத் தாபனங்கள் (திட்ட உப-விதிகள்) பற்றிய சட்டத்தின் அத்தியாயம் 261 (3) ம் பிரிவின்படி இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

கே. ஏ. டி. சில்வா,
தலைவர்,
கிராமச்சபை, தெகிவத்தை.

கிராமச்சபை அலுவலகம்,
தெகிவத்தை, 5.11.1966.

12-273—2.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,724

---

### சாவகச்சேரி நகர சபை

சோலைவரி—1967

இத்தாற் சகலரும் அறிவது, சாவகச்சேரி நகர சபை, நகர சபைச் சட்டத்தின்படி (அத்தியாயம் 255) 1967 ம் ஆண்டிற்கு சென்ற வருடத்திற்கு விதித்ததின் பிரகாரம் பின்வரும் சோலை வரியை இந்நகர சபை எல்லைக்குள் விதிக்கின்றது.

160(3) ம் பிரிவின் கீழ் சாவகச்சேரி நகர எல்லைக்குளுள்ள அசைவற்ற ஆதனங்களனைத்திற்கும் ஏழு வீத வரி, நான்கு சம தவணைகளில் முறையே பங்குனி 31, ஆனி 30, புரட்டாதி 30, மார்கழி 31 ஆகிய திகதிகளில் செலுத்தப்படவேண்டும்.

இ. டா. சிவகுரு,
தலைவர்,
நகர சபை, சாவகச்சேரி.

நகர சபை அலுவலகம்,
சாவகச்சேரி, 18.11.66.

12-229/1—2.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,724

---

### சாவகச்சேரி நகர சபை

இறைவரி இடாப்பு—1967

சாவகச்சேரி நகர சபையின் 1967 ம் வருட இறைவரி இடாப்புகள் தற்பொழுது தயாராக இருக்கின்றனவென்றும் இவைகளைச் சபையின் அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் பரிசீலனைக்காக வைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் (255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 166 ம் பிரிவிற்கிணங்க (252 ம் அத்தியாயமான) மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 235(1) ம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

இ. டா. சிவகுரு,
தலைவர்,
நகர சபை, சாவகச்சேரி.

நகர சபை அலுவலகம்,
சாவகச்சேரி, 18.11.66.

12-229/2—2.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,724

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்**

## " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் மற்றும் நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணிவரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக ரைப் அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரறுல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 15 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 15 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. | 165 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 330 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம்** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.7.66 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| **அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு)** | உள்ளூர் ரூ. | ச. | வெளியூர் ரூ. | ச. |
|---|---|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 36 | 00 | 49 | 00 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. | 26 | 00 | 31 | 50 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 33 | 50 | 41 | 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை சதம் | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 40 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 80 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. .. | 20 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. .. | 40 | 15 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைத்த அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படாது, இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேர போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாக சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

**அட்டவணை—1966**

| மாதம் | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| செத்தெம்பர் .. | 2. 9.66 | வெள்ளி | .. | 26. 8.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9. 9.66 | வெள்ளி | .. | 2. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16. 9.66 | வெள்ளி | .. | 9. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 23. 9.66 | வெள்ளி | .. | 16. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30. 9.66 | வெள்ளி | .. | 23. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| ஒக்ரோபர் .. | 7.10.66 | வெள்ளி | .. | 30. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 14.10.66 | வெள்ளி | .. | 7.10.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 20.10.66 | வியாழன் | .. | 14.10.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 27.10.66 | வியாழன் | .. | 20.10.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| நவெம்பர் .. | 3.11.66 | வியாழன் | .. | 27.10.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 10.11.66 | வியாழன் | .. | 3.11.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 18.11.66 | வெள்ளி | .. | 10.11.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 25.11.66 | வெள்ளி | .. | 18.11.66 | வெள்ளி | நண்பகல் | 12 |
| திசெம்பர் .. | 2.12.66 | வெள்ளி | .. | 24.11.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 9.12.66 | வெள்ளி | .. | 2.12.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16.12.66 | வெள்ளி | .. | 8.12.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 23.12.66 | வெள்ளி | .. | 16.12.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30.12.66 | வெள்ளி | .. | 22.12.66 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1966 ம் ஆண்டு ஜூலை மீ 15 ந் வ.

**பேர்னுட் த சில்வா,**
**அரசாங்க அழுத்தகன்.**

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.